யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

FWC

தவணைப் பரீட்சை, யூன் - 2016
Term Examination, June - 2016

தரம் :- 13 (2016)	கணக்கீடு – I	இரண்டு மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்கள்:-

சுட்டெண் :....................................

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் 1 இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 - 30	
31 - 50	
மொத்தம்	

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) கணக்கீட்டின் உள்ளீடு, வெளியீடாக அமைவது
(1) வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று
(2) கொடுக்கல் வாங்கல்கள், நிதி அறிக்கைகள்
(3) கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள்
(4) கொடுக்கல் வாங்கல்கள், நிலைமாற்றங்கள்
(5) எண்ணக்கருக்கள், நியமங்கள் (.......)

02) பின்வரும் கூற்றுக்கள் தொடர்பில் சரியானவற்றைத் தெரிவு செய்க.
A - அட்டுறு அடிப்படையிலான கணக்கு தொடர்பில் காலம் ஒன்றிற்கான வருமானம் இனங்காணப்படுவது அது உழைக்கும் போதாகும்.
B - மூடப்படும் பேரேட்டுக் கணக்காக சொத்து, பொறுப்பு, உரிமை வகைக் கணக்குகள் காணப்படுகின்றது.
C - தேறிய சொத்துக்கள் = மொத்தச் சொத்துக்கள் − (நடைமுறை அல்லாப் பொறுப்பு + நடைமுறைப் பொறுப்பு)
D - நிதிக்கூற்றுக்களில் உள்ள எல்லாக் கூறுகளும் நிலுவை அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது.
(1) AB (2) CD (3) AC (4) BD (5) ABCD (.......)

03) நிதிக் கணக்கீட்டுக்கு எண்ணக்கரு ரீதியான சட்டகத்தை உருவாக்குவதற்கு காரணமாக அமைந்தது பின்வருவனவற்றுள் எதுவாகும்?
A - கணக்கீட்டு நியமத்தைத் தயாரிப்பதற்கான அடிப்படையை வழங்கல்.
B - நிதிக்கூற்றைப் பயன்படுத்துவோருக்கு அவற்றை நன்கு புரிந்து கொள்ள ஆற்றலை வழங்குதல்.
C - உரிய கணக்கீட்டு நியமம் இல்லாத சந்தர்ப்பத்தில் நிதிக்கூற்றைத் தயாரிப்பதற்கு வழிகாட்டுதல்.
D - நிதித் தகவல்களின் பண்புத் தரத்தை மேம்படுத்துவதற்குக் கோட்பாடு ரீதியான அடிப்படையை வழங்குதல்.
(1) A யும் B யும் மட்டும் (2) A யும் B யும் C யும் மட்டும்
(3) C யும் D யும் மட்டும் (4) A யும் B யும் C யும் D யும் எல்லாம்

(5) A யும் B யும் D யும் மட்டும் (.......)

04) டிசெம்பர் மாதத்தினுள் நிறுவனமொன்று ரூபா 120,000 பெறுமதியான பொருட்களைக் கொள்வனவாளர் ஒருவருக்குப் பட்டியல் இட்டுள்ளது. ஆயினும் கொள்வனவாளருக்கு ரூபா 100,000 பெறுமதியான பொருட்கள் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளன என பின்னர் தெரியவந்தது. இந் நடவடிக்கைகளை நிறுவனத்தின் ஏடுகளில் பதிவு செய்யும் முறையாக அமைவது

	வரவு	செலவு
(1)	உட்திரும்பல் கணக்கு	கடன்படுநர் கணக்கு
(2)	கடன்கொடுத்தோர் கணக்கு	வெளித்திரும்பல் கணக்கு
(3)	விற்பனைக் கணக்கு	வெளித்திரும்பல் கணக்கு
(4)	கடன்கொடுத்தோர் கணக்கு	கொள்வனவுக் கணக்கு
(5)	விற்பனைக் கணக்கு	கடன்படுநர் கணக்கு

(.......)

05) நிரல் X இல் மூல ஏடுகளும், நிரல் Y இல் மூல ஆவணங்களும் தரப்பட்டுள்ளன.

நிரல் X	நிரல் Y
1. காசேடு	A - இன்வொய்ஸ் (பட்டியல்)
2. கொள்வனவு நாளேடு	B - குறிப்பேட்டுக் கைச்சாத்து
3. பொதுக் குறிப்பேடு	C - வரவுத்தாள்
4. உட்திரும்பல் நாளேடு	D - கைச்சாத்து
5. வெளித்திரும்பல் நாளேடு	E - செலவுத்தாள்

நிரல் X இல் குறிப்பிடப்பட்டுள்ள மூல ஏடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற மூல ஆவணங்களை நிரல் Y யுடன் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடை

(1) A, D, B, E, C ஆகும்.
(2) B, A, D, E, C ஆகும்.
(3) C, A, B, E, D ஆகும்.
(4) D, A, B, C, E ஆகும்.
(5) D, A, B, E, C ஆகும். (.......)

06) அட்டுறு, கால அளவீடு, தேறல் போன்ற எண்ணக்கருக்கள் மூன்றும் பொருத்தமாக அமையும் சந்தர்ப்பம்

(1) ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்தல்.
(2) நிதியாண்டின் இறுதியில் சீராக்குதல்.
(3) விற்பனைக் கிரயத்தைக் கணிப்பதற்கு இறுதி இருப்பினைக் கழித்தல்.
(4) கடன் விற்பனையினை நிதியாண்டின் வருமானமொன்றாக இனங்காணல்.
(5) கணக்காண்டொன்றின் முடிவில் சொத்து, பொறுப்பு தொடர்பான கணக்குகளின் மீதியை கீழ் கொண்டு செல்லல். (.......)

07) **பின்வரும் தகவல்களைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

31.03.2014, 31.03.2015 இல் முடிவடையும் ஆண்டுக்கான சொத்து பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு

	31.03.2014	31.03.2015
மொத்த சொத்து	400,000	500,000
மொத்த பொறுப்பு	200,000	?

நிகழாண்டில் - மொத்த வருமானம் 150,000
மொத்த செலவினம் 125,000

31.03.2014 ல் உரிமையாண்மை

(1) ரூபா 300,000 (2) ரூபா 200,000
(3) ரூபா 100,000 (4) ரூபா 225,000

(5) ரூபா 325,000 (.......)

08) 31.03.2015 ல் மொத்தப் பொறுப்பு

(1) ரூபா 200,000
(2) ரூபா 500,000
(3) ரூபா 275,000
(4) ரூபா 225,000
(5) ரூபா 475,000 (.......)

09) கணக்கீட்டுச் செயன்முறை என்பதற்கு கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகளில் சரியான ஒழுங்குமுறை யாது?

A - நிதிசார் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தலும், வகைப்படுத்தலும்.
B - நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை இனங்காணலும், அளத்தலும்.
C - நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.
D - பெறப்படும் வெளியீடுகள் மூலம் தொடர்பாடல்.

(1) ABCD (2) BADC (3) ABDC (4) DBCA (5) BACD (.......)

10) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் எது பிழையானது?

(1) இது கடன்கொடுத்தோரின் சுருக்கிய தகவல்களை வழங்குகின்றது.
(2) இது கொடுக்கல் வாங்கல்களைப் பதிதலில் இரட்டைப்பதிவு முறையைப் பின்பற்றுகிறது.
(3) இது கடன்கொடுத்தோரின் துணைப்பேரேட்டில் காணப்படும்.
(4) இது பரீட்சை மீதியில் காணப்படும்.
(5) இது குறித்த திகதியிலுள்ளவாறான கடன்கொடுத்தோர் மீதியை வழங்குகிறது. (.......)

11) வணிகமொன்றின் 2015.03.31 இல் முடிவடையும் வருடத்தில் இறுதி இருப்புத் தொகையானது ரூ 30,000 த்தினால் அதிகமாகவும், 2016.03.31 இல் முடிவடையும் வருடத்தின் இறுதி இருப்புத் தொகை ரூ 10,000 த்தினால் குறைவாகவும் கணிக்கப்பட்டிருந்தது. இதனால் மேற்குறிப்பிட்ட இரு வருடங்களிலும் இலாபத்தில் ஏற்படும் தாக்கம் என்ன?

	2015.03.31 இல் முடிவடைந்த வருடத்தில்	**2016.03.31 இல் முடிவடைந்த வருடத்தில்**
(1)	ரூபா 30,000 த்தினால் அதிகரிக்கும்.	ரூபா 10,000 த்தினால் குறைவடையும்.
(2)	ரூபா 30,000 த்தினால் குறைவடையும்.	ரூபா 10,000 த்தினால் அதிகரிக்கும்.
(3)	ரூபா 30,000 த்தினால் அதிகரிக்கும்.	ரூபா 20,000 த்தினால் குறைவடையும்.
(4)	ரூபா 30,000 த்தினால் அதிகரிக்கும்.	ரூபா 40,000 த்தினால் குறைவடையும்.
(5)	ரூபா 30,000 த்தினால் குறைவடையும்.	ரூபா 40,000 த்தினால் அதிகரிக்கும்.

(.......)

❖ **தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி 12 ஆம், 13 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

தமிக்க உற்பத்தி வாணிபத்தின் 31.01.2016 முடிவடைந்த ஆண்டு தொடர்பான தகவல்கள்.

31.01.2016 மூலப்பொருள்	ரூ	15,000
முதன்மைக் கிரயம்	ரூ	222,000
குறைவேலை இருப்பில் தேறிய குறைவு	ரூ	10,000
முடிவுப் பொருள் இருப்பில் தேறிய அதிகரிப்பு	ரூ	14,000
31.01.2015 இல் முடிவுப்பொருள் இருப்பு	ரூ	16,000
31.01.2015 இல் குறைவேலை இருப்பு	ரூ	17,000
உற்பத்தி மேந்தலைக்கிரயம்	ரூ	86,000

விற்பனையில் 20% சதவீதம் மொத்த இலாபம் உழைக்கப்படுகின்றது.

12) 31.01.2016 முடிவடைந்த கணக்காண்டில் உற்பத்திக் கிரயமும், விற்பனைக் கிரயமும் முறையே

(1) 318,000 , 312,000
(2) 308,000 , 294,000
(3) 315,000 , 317,000
(4) 318,000 , 304,000
(5) 308,000 , 294,000 (.......)

13) 31.01.2016 இல் முடிவடைந்த வருடத்துக்கான மொத்த இலாபமும், நிதிநிலைமைக்கூற்றில் சொத்தாக வெளிப்படுத்தப்பட வேண்டிய சரக்கிருப்பின் பெறுமதியும் முறையே

(1) ரூ 76,000 , ரூ 52,000
(2) ரூ 735,000 , ரூ 52,000
(3) ரூ 78,000 , ரூ 44,000
(4) ரூ 60,800 , ரூ 44,000
(5) ரூ 62,400 , ரூ 30,000 (.......)

14) வரையறுத்த சர்மிளா பொதுக்கம்பனியானது சாணுகா நிறுவனத்திடம் இருந்து பெறுமதிசேர் வரி நீங்கலாக ரூ 200,000 க்கு பண்டங்களைக் கொள்வனவு செய்தது. பிரியங்கா நிறுவனத்துக்கு பெறுமதிசேர் வரி உட்பட ரூ 345,000 க்கு பண்டங்களை விற்பனை செய்தது. சர்மிளா கம்பனி 15% பெறுமதி சேர் வரிக்குப் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். குறித்த காலப்பகுதியில் பெறுமதி சேர் வரிக்காகச் செலுத்திய தொகை ரூ 10,000 ஆகும். இந்நடவடிக்கை தொடர்பாகக் கடன் கொடுத்தோர், கடன்பட்டோர், அட்டுறு பெறுமதி சேர் வரி முறையே

(1) ரூபா 230,000 , ரூபா 345,000 , ரூபா 5,000
(2) ரூபா 30,000 , ரூபா 45,000 , ரூபா 5,000
(3) ரூபா 200,000 , ரூபா 300,000 , ரூபா 10,000
(4) ரூபா 230,000 , ரூபா 345,000 , ரூபா 15,000
(5) ரூபா 200,000 , ரூபா 300,000 , ரூபா 45,000 (.......)

15) மதி, மாறன், மாலதி இலாப நட்டங்கள் முறையே 3 : 2 : 1 எனப் பகிரும் பங்காளர்கள். 31.03.2016 இல் இப்பங்குடமையில் இருந்து மாலதி இளைப்பாறினார். மதிப்பிடப்பட்ட நன்மதிப்பு மூலதனக் கணக்கில் சீராக்கப்பட்டது. மதியின் மூலதனக் கணக்கு மீதி மாற்றம் அடையவில்லை. மாறனின் மூலதனக் கணக்கு மீதி ரூ 60,000 ஆல் குறைவடைந்தது. மதிப்பிடப்பட்ட நன்மதிப்பும் புதிய இலாபநட்ட விகிதமும் முறையே

(1) ரூபா 360,000 , 3 : 2
(2) ரூபா 360,000 , சமம்
(3) ரூபா 60,000 , சமம்
(4) ரூபா 60,000 , 3 : 2
(5) ரூபா 180,000 , சமம் (.......)

❖ **கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி 16, 17, 18 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

2016.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான சேரன், சோழன், பாண்டியன் பங்குடமை வணிகத்தின் தகவல்களில் சில வருமாறு

A - சோழனின் பங்குடமைச் சம்பளம் வருடாந்தம் ரூபா 24,000

B - மேற்குறிப்பிட்ட சம்பளத்தில் ரூபா 12,000 குறித்த வருடத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

C - சேரன், சோழன், பாண்டியன் என்பவர்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்பட்ட இறுதிப் பங்கு இலாபம் முறையே ரூபா 40,000, ரூபா 30,000, ரூபா 20,000 ஆகும்.

D - பாண்டியனுக்குச் செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டி ரூபா 3,000 இற்கு எவ்வித பதிவுகளும் செய்யப்படவில்லை.

E - சேரன், பாண்டியன் என்போர்களின் பொருள் பற்று முறையே ரூபா 3,000, ரூபா 2,000 ஆக இருந்ததுடன் இது தொடர்பில் எவ்வித பதிவும் செய்யப்படவில்லை.

16) மேற்காட்டிய உருப்படிகளில் எவ்வுருப்படிகள் பங்காளர்களிடையே மேற்கொள்ளப்படுகின்ற இலாப நட்டப் பகிர்வாகக் கருதப்படும்.

(1) A, B ஆகும். (2) A, C ஆகும்.

(3) A, B, C ஆகும். (4) A, B, C, D ஆகும்.

(5) A, B, C, D, E ஆகும். (.......)

17) 2016.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் சரியான இலாபமாக அமைவது

(1) ரூபா 90,000 ஆகும்.

(2) ரூபா 102,000 ஆகும்.

(3) ரூபா 106,000 ஆகும்.

(4) ரூபா 114,000 ஆகும்.

(5) ரூபா 116,000 ஆகும். (.......)

18) மேற்காட்டிய சகல தகவல்களையும் கவனத்திற் கொண்ட பின்னர் 2016.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் பங்குடமை வணிகத்தின் உரிமையில் ஏற்பட்ட அதிகரிப்புத் தொகையாக இருப்பது.

(1) ரூபா 94,000

(2) ரூபா 97,000

(3) ரூபா 100,000

(4) ரூபா 104,000

(5) ரூபா 116,000 (.......)

19) குத்தகை தொடர்பாகப் பல்வேறு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பாதுகாப்பு மற்றும் நயக்கேடுகள் குத்தகை பெற்றவரின் பொறுப்பாகும்.

B - குத்தகைக் கால முடிவில் சொத்தின் மீதான உரிமை குத்தகை பெற்றவருக்கு மாற்றக் கூடியதாக இருத்தல்.

C - சொத்தின் பொருளாதார ஆயுட்காலம் குத்தகைக் காலத்திற்கு மேலாக இருக்க முடியும்.

நிதிக்குத்தகையை வரையறுப்பதற்கு அமைவாக இருக்கும் கூற்று அல்லது கூற்றுக்கள்

(1) A மட்டும்

(2) B மட்டும்

(3) A மற்றும் B மட்டும்

(4) A மற்றும் C மட்டும்

(5) A, B மற்றும் C அனைத்தும் (.......)

❖ **20 ஆம், 21 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

வரையறுக்கப்பட்ட சிசிர கம்பனியானது அதனிடமிருந்த லொறியினை 2016.03.31 ல் ரூபா 3,000,000 இற்கு மீளமதிப்பீடு செய்தது. இது 2013.09.30 இல் ரூபா 2,700,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

✶ அதன் பயன்படு ஆயுட்காலம் 13 வருடங்கள் எனவும், அதன் இழிவுப் பெறுமதி ரூ 100,000 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

✶ நிதியாண்டு மார்ச் 31 இல் முடிவடைகின்றது.

20) 2016.03.31 ல் முடிவடையும் வருடத்துக்கான வருமானக்கூற்றில் காட்டப்பட வேண்டிய தேய்வின் பெறுமதியாக அமைவது

(1) ரூபா 200,000

(2) ரூபா 223,000

(3) ரூபா 300,000

(4) ரூபா 500,000

(5) ரூபா 800,000 (.......)

21) மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களைக் கணக்குகளில் பதிவு செய்வதன் மூலம் மொத்த முற்றடக்கிய வருமானத்தில் ஏற்படும் தாக்கமாக அமைவது

(1) ரூபா 100,000 இனால் அதிகரிக்கும்.

(2) ரூபா 200,000 இனால் அதிகரிக்கும்.

(3) ரூபா 300,000 இனால் அதிகரிக்கும்.

(4) ரூபா 600,000 இனால் அதிகரிக்கும்.

(5) ரூபா 800,000 இனால் அதிகரிக்கும். (.......)

❖ **22 ஆம், 23 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சமந்தா கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களுள் சில வருமாறு

A - வணிகத்தின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக உடன் காசுக்கு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்படல்.

B - மூன்று மாதக் காலமுதிர்வினைக் கொண்ட ரூபா 50,000 திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்படல்.

C - நிதிக்குத்தகையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்கான தவணைக் கட்டணத்தைச் செலுத்துதல்.

D - ஒவ்வொன்றும் ரூபா 50 பெறுமதி கொண்ட 10,000 சாதாரண பங்குகளைத் தற்போதுள்ள பங்காளர்களுக்கு ஒதுக்கத்தைப் பயன்படுத்தி வழங்குதல்.

22) மேற்காட்டிய நடவடிக்கைகளில் எக் கொடுக்கல் வாங்கல்களினூடாகக் காசுப்பாய்ச்சல் இடம் பெறுகிறது.

(1) A, B மட்டும். (2) A, C மட்டும். (3) A, B, C மட்டும்.

(4) B, D மட்டும். (5) B, C, D மட்டும். (.......)

23) மேற்காட்டிய எக்கொடுக்கல் வாங்கல்களினூடாக நிதிச் செயற்பாட்டிற்குரிய காசுப்பாய்ச்சல் உருவாகிறது.

(1) B மட்டும். (2) C மட்டும். (3) B, C மட்டும்.

(4) B, D மட்டும். (5) C, D மட்டும். (.......)

24) வணிகமொன்று 2016.03.31 ல் ரூபா 70,000 கிரயமுள்ள உபகரணமொன்றை வழங்கி, ரூபா 100,000 பெறுமதியான புதிய உபகரணமொன்றை அன்றே பெற்றுக்கொண்டது. இதற்காகப் பழைய உபகரணத்துடன் ரூபா 40,000 காசும் செலுத்தப்பட்டது. இவ் உபகரண வழங்கலினால் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு?

(1) இலாபம் ரூபா 10,000 (2) நட்டம் ரூபா 10,000

(3) இலாபம் ரூபா 30,000 (4) நட்டம் ரூபா 30,000

(5) நட்டம் ரூபா 50,000 (.......)

25) “இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் $16\ (LKAS - 16)$ இல் ஆதன பொறி உபகரணத்திற்கான” வரைவிலக்கணங்களில் சில வருமாறு

A - திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாட்டினைக் கழித்த பின்னர் நிதிநிலைமைக்கூற்றுகளில் காட்டப்படும் சொத்தொன்றின் பெறுமதியாகும்.

B - அறிவு, விருப்பம் என்பவற்றுடன் பிரிவினர்களுக்கிடையே கைக்கெட்டிய தூரத்தில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கலொன்றின் போது சொத்தொன்று பரிமாற்றம் செய்யப்படும் பெறுமதி

C - சொத்தொன்றின் கிரயம் அல்லது அதன் மீள் மதிப்பீட்டுப் பெறுமானத்திலிருந்து இழிவுப் பெறுமானத்தைக் கழித்த பின்னர் கிடைக்கும் பெறுமானம்

மேற்காட்டிய வரைவிலக்கணங்களில் சொத்தொன்றின் நியாயமான பெறுமதி, தேறிய பெறுமதி, தேய்விடக்கூடிய பெறுமதி என்பவற்றை ஒழுங்குமுறையாகக் காட்டும் போது அது அமையும் முறை

(1) A, B, C (2) A, C, B (3) B, A, C

(4) B, C, A (5) C, A, B (.......)

26) F_4 என்னும் மூலப்பொருள் தொடர்பான தகவல்கள் வருமாறு

மறுகட்டளையிடும் தொகை - 100 அலகுகள்

வருடத்துக்கான கட்டளை எண்ணிக்கை 40

கட்டளை ஒன்றின் தயாரிப்புச் செலவு ரூ 7.50

கட்டளை ஒன்றின் தபால் செலவு ரூ 5.00

அலகு ஒன்றுக்கான பராமரிப்புச் செலவினைக் காண்க.

(1) ரூபா 100 (2) ரூபா 12.50 (3) ரூபா 10

(4) ரூபா 2.50 (5) ரூபா 22.50 (.......)

27) தொழிற்சாலை ஒன்றின் செயற்பாட்டு மட்ட அலகுகள் 200 ஆக உள்ள போது அலகு ஒன்றின் நிலையான கிரயம் ரூபா 32 ஆக இருந்தது.

செயற்பாட்டு மட்டம் குறைந்த போது அலகுக்கான நிலையான கிரயம் ரூபா 40 ஆக அதிகரித்தது. ஆனால் மொத்தக் கிரயம் ரூ 14,400 ஆக இருந்தது. காலப்பகுதிக்கான மொத்த நிலையான கிரயத்தையும், அலகு ஒன்றுக்கான மாறும் கிரயத்தையும் கணிக்குக.

	மொத்த நிலையான கிரயம்	**அலகு ஒன்றுக்கான மாறும் கிரயம்**
(1)	ரூபா 10,000	ரூபா 32
(2)	ரூபா 8,000	ரூபா 40
(3)	ரூபா 6,400	ரூபா 50
(4)	ரூபா 14,400	ரூபா 12
(5)	ரூபா 16,400	ரூபா 72

(.......)

28) பின்வரும் அட்டவணையைத் தனித்தனியான நிலைமைகள் எனக்கருதி ஓர் காரணியில் ஏற்படும் விளைவு எவ்வாறு தாக்கம் செலுத்தும் என அட்டவணையில் தரப்படுகிறது.

மாற்றம்	BEP அலகுகள்	பாதுகாப்பு எல்லை	இலாபம்
A - நிலையான செலவு அதிகரிப்பு	குறையும்	குறையும்	குறையும்
B - மாறும் செலவு அதிகரிப்பு	அதிகரிக்கும்	அதிகரிக்கும்	அதிகரிக்கும்
C - விற்பனை விலை குறைவு	குறையும்	குறையும்	குறையும்
D - விற்பனை அளவு அதிகரிப்பு	அதிகரிக்கும்	அதிகரிக்கும்	அதிகரிக்கும்

மேலுள்ளவற்றில் சரியான தொடர்பினைக் காட்டுவது

(1) A, B, C, D எல்லாம்

(2) A, B, C மட்டும்

(3) B, C, D மட்டும்

(4) A, C மட்டும்

(5) A, C, D மட்டும் (.......)

29) வரையறுக்கப்பட்ட கம்பனியின் கணக்காண்டு முடிவுத் திகதியில் நடைபெற்ற நிகழ்வு தொடர்பாக பின்வரும் குணாம்சங்கள் உள்ளன.

A - இறந்த காலத்தில் நிகழ்ந்த பெறுபேறு காரணமாக நிகழ்காலத்தில் கடப்பாடு ஒன்று உண்டு.

B - அதனைத் தீர்ப்பதற்கு சொத்து (வளங்கள்) வெளியேறும் நிலைமை உண்டு.

C - ஏற்பாட்டு பெறுமதியைச் சாதாரணமாக மதிப்பிட முடியும்.

மேற்படி நிகழ்வு எவ் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

(1) பொறுப்பாக

(2) ஏற்பாட்டாக
(3) மதிப்பீடாக
(4) உடன்பாட்டு ஒதுக்கமாக
(5) நிகழத்தக்க பொறுப்பாக (.......)

30) ஒரு செயற்றிட்டத்தில் இருந்து எழும் பின்வரும் காசுப் பாய்ச்சல்களில் எது தேறிய நிகழ்காலப் பெறுமதி முறையின் அடிப்படையில் மதிப்பிடப்படும் தேறிய காசுப்பாய்ச்சலினைக் கணிப்பதுடன் தொடர்பற்றதாக இருக்கும்?
(1) வருமானம்
(2) செயற்பாட்டுச் செலவுகள்
(3) தொழிற்படு மூலதனம்
(4) ஆரம்ப முதலீடு
(5) வட்டிச் செலவுகள் (.......)

31) 2016.03.31ம் திகிதியில் முடிவடைந்த வருடத்தில் நிறுவனமொன்றின் வட்டி தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.
2015.04.01 இல் சென்மதி - 20,000
2016.03.31 இல் சென்மதி - 30,000
வருமானக்கூற்றில் கழிக்கப்பட்டுள்ள பெறுமதி 90,000
இத்தகவல்களின் அடிப்படையில் வருடத்தில் காசாகச் செலுத்திய வட்டிக் கொடுப்பனவு

....

32) நிதி அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தலின் பொருட்டு கருத்தில் கொள்ளப்பட வேண்டிய எண்ணக்கரு மாதிரிச் சட்டத்தின் கூறுகள் 4 இனைப் பெயரிடுக.
(1) ....
(2) ....
(3) ....
(4) ....

33) 1995 ஆம் ஆண்டின் 15ம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கிழ் உருவாக்கப்பட்ட இரண்டு சட்ட ரீதியான நிறுவனங்கள் எவை?
(1) ....
(2) ....

34) வணிகமொன்றின் 2016.03.31 இல் முடிவடையும் வருடத்தில் கணிக்கப்பட்ட இலாபம் ரூபா 58,000 ஆகும். பின்வரும் வழுக்கள் நிகழ்ந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. (இந்நிறுவனம் கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுவதில்லை)
(1) ரூ 4,600 பெறுமதியான விற்பனைப் பட்டியலொன்று விற்பனை நாளேட்டில் ரூபா 6,400 எனப் பதியப்பட்டிருந்தது.
(2) கொள்வனவு குறிப்பேட்டின் கூட்டுத்தொகை ரூபா 4,000 ஆல் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.
(அ) வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதிக் காட்டுக. (விளம்பல் அவசியமில்லை)
....
....
....
....

(ஆ) வழுக்களைத் திருத்திய பின்னர் இலாபம் எவ்வளவு?

....

35) கீழே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு அடிப்படை வழங்கும் எண்ணக்கருவைத் தருக.

அடிப்படை வழங்கும் எண்ணக்கரு

(1) ஐயக்கடன் ஏற்பாடு ....

(2) பற்று ....

(3) முற்பண செலவினம் ....

(4) நடைமுறை அல்லாச் சொத்தின் கிரயம் ....

36) வணிகமொன்று குறித்த நிதியாண்டொன்றில் கொள்வனவு செய்த இருப்புக்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

	ரூபா 000
பட்டியல் படுத்தப்பட்ட விலை ரூபா (6000 வீதம் 1000 அலகுகள்)	6000
வியாபாரக் கழிவுகள்	300
உட்சுமைக்கூலி	100
விநியோகச் செலவுகள்	600

வருட இறுதியில் காணப்பட்ட இருப்பு 100 அலகுகளாகும்.

வருட இறுதியில் காணப்படும் இருப்பின் கிரயத்தைக் கணிப்பிடுக.

....

37) வணிகமொன்றின் 2016.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

2015.04.01 ஆம் திகதியில் கடன்பட்டோர் மீதி	120,000
2016.03.31 ஆந் திகதியில் கடன்பட்டோர் மீதி	180,000
வருடத்தினுள் பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக்கடன்	4,800
பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக்கடன் மீளக் கிடைக்கப் பெற்றது	6,000

ஒவ்வொரு வருடத்திலும் இறுதிக் கடன்பட்டோர் மீதியின் அடிப்படையில் 4% உம் ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்படும்.

(1) 2016.03.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தின் வருமானக்கூற்றில் காட்ட வேண்டிய அறவிடமுடியாக் கடனையும், ஐயக்கடன் பெறுமானத்தையும் கணிப்பிடுக.

....

(2) 2016.03.31 ஆந் திகதியில் கடன்பட்டோரின் தேறிய பெறுமானத்தில் எவ்வளவு அதிகரிப்பு அல்லது குறைவு ஏற்பட்டுள்ளது?

....

38) கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் சரியானவை / பிழையானவை

A - புதிய தகவல்கள் காரணமாக அவைகள் மாற்றமடைகின்றன.

B - அவை நிதிக்கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கும், சமர்ப்பிப்பதற்கும் தேவையானவை

C - அவைகள் குறிப்பிட்ட எடுகோள்களின் அடிப்படையிலானவை.

D - அவை நிதிக்கூற்றுக்களின் பண்புசார் குணாதிசயங்களினைப் பாதுகாக்க அவசியமானவை.

A - .... B - ....

C - .... D - ....

39) இலாப நோக்கமற்ற நிறுவனம் ஒன்றில் 01.04.2015 இல் பின்வரும் மீதிகள் காணப்பட்டன.

திரண்ட நிதியம் 350,000

கட்டட நிதியம்	250,000
ஆயுட் சந்தா	80,000
கட்டடம்	300,000

31.03.2016 இல் பெறுமானத் தேய்வு, ஆயுட்சந்தா நீக்கலாக வருமான மிகை ரூ 125,000 ஆகும். ஆயுள் சந்தாவில் 15,000 ரூபா நிதி வருடத்திற்கு உரியதாகும். 31.03.2016 இல் முடிவடையும் நிதி வருடத்தில் கட்டிட நிர்மாணத்திற்காகக் கட்டிட நிதியில் இருந்து ரூபா 100,000 பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயுட் சந்தாவில் ரூபா 10,000 தொகைக்குரிய நபர் இறந்துவிட்டார். கட்டிடத்திற்குக் கால எல்லை பொருட்படுத்தப்படாமல் ஆண்டிறுதியில் உள்ள தொகை மீது 5% பெறுமானத்தேய்விடப்படுகின்றது. பின்வருவனவற்றைக் கணிக்குக.

(1) திரண்ட நிதியம் ....

(2) கட்டிட நிதியம் ....

(3) ஆயுட்சந்தா ....

(4) கட்டிடத்தின் தேறிய பெறுமானம் ....

40) பின்வரும் கூற்றுக்கள் உண்மையானது அல்லது பொய்யானது என்பதைக் குறித்த புள்ளிக்கோட்டில் "✓" எனும் அடையாளத்தில் காட்டுங்கள்.

	உண்மை	பொய்
A - கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் போது இடம்பெறும் சகல வழுக்களையும் பரீட்சை மீதியினூடாக அறிய முடியும்.	....	....
B - பண்டமொன்றைக் கொள்வனவு செய்யும் போது குறிப்பிட்ட விலையில் இருந்து கழிக்கப்படுகின்ற கழிவானது பெற்ற கழிவு கணக்கில் செலவு வைக்கப்படும்.	....	....
C - கைவிரல் அடையாள இயந்திரமானது நிறுவனமொன்றின் செயற்பாட்டுக் காலத்தை அறிக்கைப்படுத்தப் பயன்படுகின்றது.	....	....
D - முகாமைக் கணக்கீடானது நிறுவனம் பற்றிய கடந்தகால நிகழ்காலத் தகவல்களை வழங்குகிறது.	....	....

41) பின்வரும் கணக்குகள் எவ்வகை கணக்குகள் எனக் குறிப்பிடுக.

(1) ஊழியர் சேமலாப நிதியச் செலவுக் கணக்கு ....

(2) ஊழியருக்கு வழங்கிய கடன் கணக்கு ....

(3) பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு ....

(4) ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு ....

42) வரையறுக்கப்பட்ட நாதன் பொதுக் கம்பனியானது 2016.03.31 ல் முடிவடையும் வருடத்திற்காகப் பின்வரும் தகவல்களை வழங்குகின்றது.

	(ரூபா 000)
கூட்டிணைக்கப்பட்ட மூலதனம் :	
சாதாரண பங்குகள்	4,000
ரூபா 2/= முன்னுரிமைப் பங்குகள்	1,000
ஒதுக்கங்கள்	2,000
10% தொகுதிக்கடன்	500
விற்பனை	4,500
விற்பனைக் கிரயம்	3,000

மேலதிகத் தகவல்கள் : (1) வரிக்கு முன்னரான இலாபம் உரிமையாளரின் உரிமையில் 10% ஆகும்.
(2) உரிமையாண்மையின் 1.5 மொத்தச் சொத்துக்களாகும்.

பின்வருவனவற்றைக் கணிக்க.

(அ) வட்டிப் பாதுகாப்பு வீதம் ....

(ஆ) சொத்துப் புரள்வு வீதம் ....

43) வரையறுத்த ஒபாமா கம்பனியின் 2016 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திற்கான தகவல்கள் வருமாறு

- ✶ சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் எண்ணிக்கை 20. நாளொன்றுக்கு 8 மணித்தியாலப்படி மாதத்திற்கு 24 நாட்கள் வேலை செய்ய வேண்டும்.
- ✶ எல்லா ஊழியர்களும் ஒழுங்காக சேவைக்குச் சமூகமளித்தனர்.
- ✶ சாதாரண மணித்தியாலக் கூலி ரூபா 40. மேலதிக நேரக்கூலி மணித்தியாலத்திற்கு ரூபா 50.
- ✶ மாதத்தில் வேலை செய்த மணித்தியாலம் 4000
- ✶ ஊழியர் சேமலாப நிதி அடிப்படைச் சம்பளத்தில் 10% ஐ ஊழியரும் 15% ஐ கம்பனியும் பங்களிப்புச் செய்யும்.
- ✶ எல்லாக் கொடுப்பனவுகளும் அடுத்துவரும் மாதத்தில் இடம்பெறும்.

(1) 2016.01.31 இல் முடிவுற்ற மாதத்திற்கான கம்பனியின் வருமானக்கூற்றில் காட்டப்பட வேண்டிய உருப்படிகளையும் அதன் பெறுமதியையும் குறிப்பிடுக.

....

....

(2) 2016.01.31 இல் ஐந்தொகையில் காட்டப்பட வேண்டிய உருப்படிகளையும் அதன் பெறுமதியையும் குறிப்பிடுக.

....

....

44) பின்வரும் விடயங்களில் நிதிநிலைமைக்கூற்று தயாரிப்பு தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகளில் சீராக்கம் செய்யத் தேவையற்ற விடயங்களை எடுத்துக்காட்டும் நிகழ்வுகளுக்கு (✓) அடையாளம் இடுக.

A - இறுதி இருப்பின் பெறுமதி வீழ்ச்சி ☐

B - புதிய பங்கு வழங்கல் ☐

C - நடைமுறையல்லாத சொத்துக் கொள்வனவு ☐

D - கடன்படுநர் முறிவடைதல் ☐

45) மூலப்பொருள் பெறுவனவு, வழங்கல் அல்லது உள்ளக மாற்றம் தொடர்பாகப் பேணப்படும் பதிவேடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

....

....

46) பொறுப்புக்களுக்கும், உரிமையாண்மைக்கும் இடையிலான ஒத்த தன்மை இரண்டும், வேறுபாட்டுத் தன்மை இரண்டும் தருக.

ஒத்த தன்மை :-

....

....

வேறுபாடு :-

....

....

47) 2016.03.31 இல் முடிவடையும் வருடத்துக்கான துளசி கம்பனியின் தகவல்கள் வருமாறு

	ரூபா 000
குறித்த நிதியாண்டிற்கான இலாபம்	5,200
தளபாட விற்பனை இலாபம்	200
செலுத்திய வருமான வரி	300
மோட்டார் வான் தேய்வு	100
கடன்படுநர் அதிகரிப்பு	20
வருடத்துக்கான வரி ஏற்பாடு	360

கம்பனியின் செயற்பாட்டுச் செயன்முறைகளினூடாக உருவான தேறிய காசுப் பாய்ச்சல் எவ்வளவு?

....

48) வரையறுக்கப்பட்ட இம்ரான் கம்பனியின் பொதுப் பேரேட்டில் உள்ள கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி தனிநபர் கணக்குகளின் கடன்பட்டோர் மீதி பட்டியலின் கூட்டுத்தொகைக்கும் இடையிலான இணக்கக்கூற்று கீழே தரப்பட்டுள்ளன.

கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி	650,670
நாளேட்டில் விடுபட்ட விற்பனைப் பட்டியல்	35,240
	685,910
தனிநபர் கணக்கில் விடுபட்ட கழிவு	(15,400)
கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியாத அறவிடமுடியாக்கடன்	(7,220)
கடன்பட்டோர் பட்டியல் மீதி	663,290

இம்ரான் கம்பனியின் நிதிநிலைமைக்கூற்றில் கடன்படுநர் பெறுமானமாகக் காட்டவேண்டிய பெறுமதி

....

49) பாதணிகளை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றுடன் தொடர்புடைய பின்வரும் ஒவ்வொரு கிரயங்களையும் ''நேர்க்கிரயம்'' அல்லது ''நேரில் கிரயம்'' என வகைப்படுத்துக.

(அ) தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் ....

(ஆ) பொறி இயந்திரத் தேய்வு ....

(இ) இயந்திர இயக்குனர் கூலிகள் ....

(ஈ) பதனிடப்பட்ட தோலின் கிரயம் ....

50) வரையறுத்த பொதுக்கம்பனி தற்போது பயன்பாட்டில் உள்ள இயந்திரத்திற்கு பதிலாகப் புதிய இயந்திரத்தை அறிமுகப்படுத்தினால் வருடாந்த செயற்பாட்டுச் செலவு ரூபா 350,000 இல் இருந்து ரூபா 250,000 வரை குறைவடையும் என்றும், தேய்வு ரூபா 100,000 இல் இருந்து ரூபா 150,000 வரை அதிகரிக்கும் என்றும் விற்பனை வருமானம் மாற்றமின்றி இருக்குமெனவும் (ரூபா 500,000) கூறுகின்றது. இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 750,000 ஐப் பயன்படுத்த வேண்டிவருவதுடன் பழைய இயந்திரத்தை விற்று ரூபா 100,000 பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பழைய இயந்திரத்தின் புத்தக விலை ரூபா 180,000 ஆகும்.
மேற்தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விடை தருக.

(1) காசுப் பாய்ச்சல் அல்லாத விடயம்

....

(2) ஆழ்ந்த கிரயம்

....

(3) வருடாந்தக் காசு உட்பாய்ச்சல்

....

(4) காசு வெளிப்பாய்ச்சல்

....

The National e-learning Portal for The General Education